## வந்தேன் நான் வந்தேன்

வந்தேன் நான் வந்தேன்
இயேசுவே உம்மண்டை வந்தேன்
பாவி நான் மாற வந்தேன்
இரத்தத்தால் சுத்திகரியும்

எனக்காக முள்முடி அணிந்தீர்
கேலி பேச்சு துன்பங்கள் சகித்தீர்
எனக்காக வாரடிப் பொறுத்தீர்
இயேசுவே உம்மை நேசிக்கிறேன்

எனக்காக சிலுவையை சுமந்தீர்
இரத்த காயம் வேதனை அடைந்தீர்
எனக்காக உயிரையும் தந்தீர்
இயேசுவே உம்மை நேசிக்கிறேன